செ.வெ.எண்: 78 நாள்: 27.11.2016

# தமிழகஅரசு மேற்கொண்ட சிறப்பான நடவடிக்கைகளால் இந்திய அளவில் உடல் உறுப்பு தானத்தில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் இந்திய உறுப்புதான வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியினை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச்செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், தேசிய நலவாழ்வு மைய திட்ட இயக்குநர் டாக்டர்.தாரேஸ்அகமது,இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 26.11.2016 அன்று துவக்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு பேரணியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி இந்திய உறுப்புதான வார (நவம்பர் 22 முதல் 27 வரை) விழாவினை முன்னிட்டு புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. உடல் உறுப்பு தானம் என்பது நோயுற்று உடலுறுப்பு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மற்றொருவர் அந்த உடல் உறுப்பை தானமாக அளிப்பது ஆகும். மேலும் ஒருவர் உயிருடன் இருந்தாலும் அவருடைய மூளையின் பகுதி பாதிப்பு அடைந்து செயல் இழக்கும் நிலையில் அவருடைய இருதயம், சிறுநீரகம் உள்ளிட்ட முக்கியமான உடல் உறுப்புகள் அவருடைய வாரிசுதாரர்கள் விரும்பினால் தானம் செய்யலாம். இந்த உடல் உறுப்புகளை தானமாக பெற்று பலர் உயிர் வாழ முடியும் என்பதால் உடல் உறுப்பு தானம் செய்வது மிகவும் முக்கியமானதாகும்.

மேலும் இப்பேரணியில் கலந்து கொண்டவர்கள் “உறுப்பு தானம் செய்வோம், உயிர்களை காப்போம், தானத்தில் சிறந்த தானம் இரத்த தானம், இறந்தும் வாழ்கிறோம் உடல் உறுப்பு தானத்தால், கண் தானம் செய்து பிறருக்கு கண் ஒளி கொடுப்போம், இதய தானம், நுரையீரல் தானம், சிறுநீரக தானம், உடல் தானம், மண்ணில் மக்கும் இதயத்தை தானம் செய்வோம், உடல் உறுப்பு தானம், உயிர் தானம், மூளைச்சாவு ஒன்று உடல் உறுப்பு தானத்தால் வாழும் உயிர் பல” என பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இப்பேரணி பொது அலுவலக வளாகத்தில் தொடங்கி அண்ணா சிலை, கீழராஜவீதி, பிருந்தாவனம் முக்கம் வழியாக நகர் மன்றத்தை சென்றடைந்தது. தமிழகத்தில் பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வை தமிழக அரசு ஏற்படுத்தியதை தொடர்ந்து, தமிழகஅரசு மேற்கொண்ட சிறப்பான நடவடிக்கைகளால் இந்திய அளவில் உடல் உறுப்பு தானத்தில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் இதன் மூலம் உரிய விழிப்புணர்வை பெற்று உடல் உறுப்பு தானம் செய்து பிறரது வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இப்பேரணியில் இயக்குநர்கள் மரு.கே.செங்குட்டுவன் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்), மரு.நாராயணபாபு (மருத்துவக்கல்வி இயக்ககம்), மரு.க.குழந்தைசாமி (பொது சுகாதாரம்), மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பரிமளாதேவி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., இணை இயக்குநர் மரு.சம்ஷாத்பேகம் (பொது சுகாதாரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, அர்பன் கூட்டுறவு பண்டகசாலை சங்கத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், பொதுசுகாதாரம் துணை இயக்குநர்கள் மரு.பரணீதரன் (புதுக்கோட்டை), மரு.கலைவாணி (அறந்தாங்கி), மருத்துவ அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**